REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 5உ வெள்ளி (20—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 6உ சனி (21—12—57) [இதழ் 162

இந்தியாவிலேயே பெரிய பாலம்

புதுடில்லி, டிச. 18—

இந்தியாவிலேயே சாலைகளில் அமைக்கப்படும் பாலங்களில் மிகப் பெரியதாக இருக்கப்போகும் பாலம் ஒன்று கட்டப்பட்டு வருகிறதாம்!

ஆந்திராவில் உள்ள கோதாவரியின் கௌஹாத்தி கிளையில் இது கட்டப்பட்டு வருகிறதாம்!

இந்தப் பாலத்தின் நீளம் ஒன்றரை மைல் என்றும், 1956-ல் கட்டத் துவங்கியுள்ள பாலம் 1960-ம் ஆண்டில் உபயோகத்திற்கு வரும் என்றும், செலவு ரூ. 1·25 கோடியாகும் என்றும் கூறப்படுகிறது.

தென்னாட்டவர் ஏமாந்தவர்களல்ல!

சுலபமாக இந்தியைப் புகுத்திவிடலாம் என்ற எண்ணம் தவறானதாகும்

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தைச் செலவழித்தாலும் இந்தி வளம்பெறாது

எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிராக சி.பி. இராமசாமி குரலெழுப்புகிறார்

சேலம், டிச. 20—

"இந்தியை சுலபமாக தென்னிந்தியாவில் புகுத்திவிடலாம் என்று எண்ணினால் அது தவறான எண்ணமாகும்; தென்னிந்தியர்கள் அந்த அளவுக்கு ஏமாந்தவர்கள் அல்ல! ஐ. ஏ. எஸ். பரீட்சைக்கு இந்தி படிக்க வேண்டும் என்று கூறுவது தென்னிந்தியாவுக்குப் பாதகமான செயலாகும்"

—என்று, சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள், சேலத்தில் நடைபெற்ற நினைவுநாள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

16—12—57-ல் சேலம் விஜய ராகவாச்சாரியார் ஹாலில் நடைபெற்ற, காலஞ்சென்ற திவான் பகதூர் கே. சுந்தரம் செட்டியார் நினைவு நாள் கூட்டத்தில் பேசுகையில் சர். சி. பி. இராமசாமி அய்யர் கூறியதாவது:—

"இப்பொழுது எங்கு பார்த்தாலும் மொழிப் பிரச்சினை குறித்து பேசப்படுகிறது. இந்தியை தேசிய மொழியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தியை 42 சத விகித மக்கள் பேசுவதாகவும், 58 சத விகித மக்கள் இந்தி அல்லாத மற்ற மொழிகளைப் பேசுவதாகவும் கூறப்படுகிறது. எல்லோரும் ஒரேவித இந்தியைப் பேசுவதில்லை; பலரகமான இந்தியைப் பேசுகிறார்கள்.

"முகலாயர்கள் நம் நாட்டிற்கு வந்தபொழுது, இந்தியாவில் பேசப்பட்ட மொழிகளிலுள்ள வார்த்தைகளைக் கலந்து உருது மொழியைப் பேசினார்கள். உருது மொழியை ஆட்சி மொழியாக்கினார்கள். உருது, மற்றும் பல மொழிகளிலுள்ள வார்த்தைகள் கலந்ததுதான் இந்தி; அது இன்னும் வளர்ச்சி பெறவில்லை; அதில் சிறந்த இலக்கியங்கள் இல்லை; இன்னும் அபிவிருத்தி பெற வேண்டியுள்ளது; ஆங்கிலம் அடைந்துள்ள நிலையை இந்தி இன்னும் அடையவில்லை. சர்வ தேசத் தொடர்புக்கும், விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கும் ஆங்கிலம்தான் பெரிதும் பயன்படுகிறது; ஆங்கிலம் பயன்படுகிற அளவுக்கு இந்தி பயன்படாது.

"வட இந்தியாவில் சுத்தமான இந்தி பேசப்படுவதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரக இந்தியைப் பேசுகிறார்கள்; ஆனால் தென்னிந்தியாவில்தான் சுத்தமான இந்தியைப் பேசுகிறார்கள்.

"தென்னிந்தியர்கள் ஆங்கிலத்தைக் கற்று அதில் பழக்கப்பட்டு இருக்கிறார்கள்; ஆகவே, ஆங்கிலத்தையே தொடர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தி நன்றாக வளம்பெற்றபின், இந்தியைத் தேசியமொழியாக்குவதைப் பற்றி யோசிக்கலாம்.

"இந்தியை வளப்படுத்துவதற்காக மற்ற மொழிகளில் உள்ள வார்த்தைகள் இந்திக்கு மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. இந்தி நன்றாக வளம்பெற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கும் பணத்தைச் செலவழித்தால்கூட போதாது; ஆகவே, இந்தி நன்றாக வளம் பெறுகின்றவரையில் இந்தியைத் தேசிய மொழியாக்குவதை நிறுத்திவைக்க வேண்டும்.

"ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக்கொண்டிருப்பதால்தான் இந்தியாவின் பிரதிநிதிகள் ஐ. நா. சபையிலும், வெளிநாடுகளிலும், சர்வதேச விவகாரங்களிலும் நன்றாகப் பேசமுடிகிறது"

எல்லாம் வல்ல இறைவன் - டெல்லி!

எதற்கெடுத்தாலும் அங்கு ஓடுகிறோம் நாம்

இந்தி எதிர்ப்புக்கு இந்த நிலையை சாதகமான வாதமாக்குகிறார் ஆச்சாரியார்!

சென்னை, டிச. 18—

இன்றைய அரசியல் அமைப்பில் டெல்லியின் நிலை என்ன என்பதை, முன்னாள் கவர்னர்-ஜெனரல் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் ஒய். எம். சி. ஏ. கூட்டம் ஒன்றில் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசுகையில் விளக்கியிருக்கிறார்.

'டெல்லி, எல்லாம் வல்ல இறைவனாக்கப்பட்டிருக்கிறது; மாநிலங்களின் சுதந்தரம் என்பது படிப்படியாக மறைந்து வருகிறது' என்று அவர் மிக்க வருத்தத்துடன் எடுத்துரைத்திருக்கிறார்

அவர் கூறியதாவது:—

"மாநிலங்களின் சுதந்தரம் என்பது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது; மத்திய சர்க்கார், சகல துறைகளிலும் 'எல்லாம் வல்ல'தாக்கப்பட்டுள்ளது; நாம் இன்று உண்ணும் உணவுகூட மத்திய சர்க்காரால்தான் நிர்ணயிக்கப்படுகிறது! 'கோதுமை அதிகம் சாப்பிடுங்கள்; அரிசி உண்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள்' என்ற கட்டளை மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் நாம் ஏதாவது ஒரு சிறு காரியம் செய்ய வேண்டுமென விரும்பினாலும், அதற்கு டெல்லிக்குத்தான் ஓட வேண்டியிருக்கிறது; திட்டக் குழுவை நாட வேண்டியுள்ளது."

தொடர்ந்து பேசிய ஆச்சாரியார் அவர்கள், இந்த நிலையையும் தனது இந்தி எதிர்ப்புக்குச் சாதகமான வாதமாக்கியிருக்கிறார்.

"இப்படி, மத்திய சர்க்கார், மாநிலங்களிடத்தில் பலவகையிலும் தொடர்புகொள்ள வேண்டியிருக்கையில், இந்தியை ஆட்சி மொழியாக்குவதினால், இந்தி பேசாத மக்களுக்கு ஏற்படக் கூடிய இன்னல்களை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டாமா?" என்று அவர் கேட்டிருக்கிறார்.

"இந்தியே ஆட்சி மொழியாக வேண்டும் என நிர்ப்பந்திக்கிறவர்கள், இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளுக்குப் போதுமான மதிப்பளிக்கவில்லை; கஷ்டங்கள் பற்றிப் போதுமான அளவு கவலைப்படவில்லை என்றே தோன்றுகிறது"

என்று குற்றஞ்சாட்டிய ஆச்சாரியார் அவர்கள், 'இந்தி மொழி ஆட்சி மொழியாவதற்கு எவ்வித தகுதியையும் பெறவில்லை' என்பதை விளக்கியும், 'இந்தி ஆட்சி மொழியாவதற்கு அனுமதிக்கக் கூடாது' என்று எச்சரித்தும், 'ஆங்கிலமே நீடிக்க வேண்டும்' என வற்புறுத்தியும் பேசியிருக்கிறார்.

இந்தியாவில் மதுவிலக்கு

தோற்றுவிட்டதாக இலங்கை கருதுகிறதா?

புதுடில்லி, டிச. 19—

"இலங்கை மதுவிலக்குக் கமிஷன், இந்தியாவில் அவசர அவசரமாக மதுவிலக்குப் புகுத்தப்பட்டதால், அது தோல்வி அடைந்துவிட்டது என்று கூறியதா?"

என்று கேட்கப்பட்ட போது, மாநிலங்கள் சபையில் உள்நாட்டு மந்திரி தத்தார் 'இல்லை' என்று பதிலளித்திருக்கிறார்.

ஓரளவுக்குத் திட்டம் வெற்றி என்றே தாங்கள் கருதுவதாகவும் வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தாராம்.

ராஷ்டிரபதிபவனத்திற்கு ஓவியங்கள்

நேருவின் படம் எழுத லண்டனிலிருந்து ஓவியர் வரவழைக்கப்பட்டாராம்!

மவுண்ட்பாட்டன் தரும் தகவல்

ராஷ்டிரபதிபவனத்தில், நேரு, மற்றும் தலைவர்களின் உருவப் படங்களை வைப்பதற்காக அவற்றை எழுத லண்டனிலிருந்து ஒரு பிரபல ஓவியர் வரவழைக்கப்பட்டாராம்!

இந்தத் தகவலை, இந்தியாவின் கடைசி வெள்ளைக்கார கவர்னர்-ஜெனரலான மவுண்ட்பாட்டன், லண்டன் விழா ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

"1948-ம் ஆண்டில் நான் இந்தியாவை விட்டுப் புறப்பட்டபோது, ராஷ்டிரபதிபவனத்திற்கான ஓவியங்களை எழுத ஏற்பாடு செய்யவேண்டும் என இந்திய சர்க்கார் என்னைக் கேட்டுக்கொண்டது; நான் இங்கு வந்ததும், ஹால்வீடே என்ற ஓவியருடன் தொடர்பு கொண்டு அவரை டெல்லிக்கு அனுப்பினேன்; அவர், பண்டித நேருவின் படம் வரைந்து கொடுத்தார்; அதே ஓவியர் தான் இந்தப் படத்தையும் வரைந்தவர்"

என்று கூறி மவுண்ட்பாட்டன், அந்த ஓவியர், இலண்டனில் உள்ள இந்திய தூதுவராலயத்திற்குத் தந்த நேருவின் படத்தைத் திறந்துவைத்திருக்கிறார்.

'வனஸ்பதி'யைத் தடை செய்யும் நோக்கம் இல்லையாம்!

மாறாக ஊக்குவிக்கவே விரும்புகின்றனராம்

கலப்படம் செய்வதைத் தடுக்கவும் முடியவில்லையாம்'

புதுடில்லி, டிச. 18—

வனஸ்பதி உற்பத்தியைத்தடை செய்யும் நோக்கம் சர்க்காருக்கு இல்லையாம்; மாறாக, அதனை ஊக்குவிப்பதற்கே சர்க்கார் விரும்புகிறதாம்!

"'வனஸ்பதி' உபயோகம் தீய விளைவுகளுடையது என்பதால் உற்பத்தியாகாமல் அதனைத் தடுக்குமா?"

என்று மாநிலங்கள் சபையில் கேட்டபோதுதான். மேற்கண்டவாறு விவசாய மந்திரி டாக்டர் பி. ஆர். தேஷ்முக் கூறினாராம்'

சுத்தமான நெய்யுடன் இந்த வனஸ்பதி கலப்படம் செய்யப்படுவதை ஒப்புக்கொண்ட அந்த மந்திரி, அதனைத் தடுக்க சர்க்கார் முயற்சித்துவருவதாகவும், வனஸ்பதியை வேறு நிறமுடையதாக்கத் தக்க பொருளினை சர்க்கார் இன்னும் காண முடியவில்லை என்றும் கூறினாராம்! தொடர்ந்து அப்படி ஒரு பொருள் காண்பதற்கான முயற்சி நடைபெறுவதாகவும் அவர் கூறினாராம்!

அரிசி, நெல் இவற்றிற்கு உச்ச விலை நிர்ணயம்

மத்திய சர்க்கார் ஏற்பாடு

சென்னை, டிச. 19—

தென் அரிசி மண்டலத்தில் உள்ள நான்கு மாநிலங்களிலும், அரிசி, நெல் இவற்றின் உச்ச விலையை, மத்திய உணவு அமைச்சரவை நிர்ணயிக்கும் என்று கூறப்படுகிறது.

இப்படி நிர்ணயிக்கப்படுகிற விலைக்குமேல் அவற்றின் விலை செல்லாமல் தடுப்பதே விலை நிர்ணயம் செய்வதின் நோக்கம் என்றும், உபரிப் பிரதேசமான ஆந்திரத்திலிருந்து சென்னை—கேரளத்திற்குத் தாராளமாக அரிசி செல்வதற்குத் துணை புரியும் வகையில் விலை நிர்ணயிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டின் பிரச்சினை எல்லாம், தஞ்சையிலிருந்து ஏராளமான அரிசி கேரளத்திற்குச் சென்றுவிடுகிறது என்றும்இரண்டரை இலட்சம் டன் அரிசி செல்லுவதாக மதிப்பிடப்பட்டிருக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—12—57 வெள்ளி

நிபுணர்கள் கூறுவரா?

விவசாயத்தையே நம்பி வாழும் நாடாகத் தமிழகம் இருந்துவருகிறது. இந்த நிலைமை, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆண்டுக்காலமாகவே இந்தநிலை இருந்துவருகிறது.

இப்பகுதி விவசாயத்திற்குத் தேவைப்படும் நபர்களுக்கு பலமடங்கு அதிகமாக, விவசாயத்தில் மட்டுமே ஈடுபட்டுவரும மக்கள் இங்கு இருந்துவருகின்றனர். அப்படி விவசாயத்தில் மட்டுமே ஈடுபட்டுவரும் மிகுதியான மக்களில் பெரும்பான்மையினர் வெறும் விவசாயக் கூலிகளாகவே இருந்துவருகின்றனர்.

எனவே, வெறுங்கூலிகளாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறவர்களுக்கு, போதிய வருமானம் கிடைப்பதில்லை. எனவே, அவர்களிடம் வாங்கும் சக்தி குறைவாக இருப்பதுடன், வருவாயை மீதப்படுத்துவது என்ற பேச்சுக்கும் இடமில்லாமல் இருக்கிறது.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் இருந்துவரும் பெருந்தொழில் கைத்தறித் தொழில்; அத்தொழிலிலும் பல இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பெற்றுவரும் வருமானமும் நிலையானதாக இருப்பதில்லை. அடிக்கடி ஏறுவதும இறங்குவதுமாக இருந்துவரும் ஒன்றாகும்.

வருமானம் கூடினாலும் குறைந்தாலும், அதற்கொப்ப, நெசவாளர்களின் வாங்கும் சக்தி கூடுவதும் கிடையாது— குறைவதும் கிடையாது. 'உப்பு மிஞ்சினால் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினால் உப்பு' என்பதுபோல், அவர்களுடைய வருமானப் பெருக்கமும் குறைவும், அவர்களுடைய நித்திய வாழ்வில் குறிப்பிடத்தகுந்த சிறு மாற்றத்தையும் தோற்றுவிப்பது கிடையாது.

கைத்தறித் தொழிலுக்கு அடுத்த நிலையில் இருந்துவருவது, காங்கிரசு அரசாங்கத்தின் தத்துப்பிள்ளை நிலையில் இருந்துவரும் கதர்த் தொழிலாகும். அத்தொழிலில் ஈடுபட்டுவருகின்றவர்களின் உடலையும், உயிரையும் ஒன்றாக இணைத்துவைத்திருப்பதற்குத்தான் கதர்த் தொழில் பயன்பட்டுவருகிறதே அல்லாது, அவர்களுடைய வாங்கும் சக்தியைக் கூட்டுவதற்கும், அத்தொழிலுக்கும் கடுகளவு சம்பந்தமும் கிடையாது; அத்தகைய ஆற்றல் கதர்த் தொழிலுக்குக் கிடையவும் கிடையாது.

விவசாயம், கைத்தறித் தொழில், கதர்த்தொழில் ஆக மூன்று தொழில்களும போக, எஞ்சி இருப்பது குடிசைத் தொழில்களாகும். நெற்குத்தல், பனைவெல்லம் காய்ச்சல், கூடை முடைதல், பாய் முடைதல், மண் பாண்டம் செய்தல், பித்தளை-செப்புப் பாத்திரங்கள் செய்தல், கயிறு திரித்தல், பன்றி வளாத்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல், வாத்து வளர்த்தல், தேனீ வளர்த்தல் போன்ற தொழில்களில் தமிழ் மக்கள் ஈடுபட்டுவருகின்றனர். இவை அனைத்தும், இத்தொழில்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கு வழங்கக்கூடிய வாங்கும் சக்தி ஒன்றுமே இல்லை.

அடுத்த கட்டத்தில் இருந்துவருவது, இயந்திர உதவி கொண்டு இயங்கிவரும் நூற்பு ஆலைகளும், நெசவாலைகளும ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெசவாலைகள் குறைவு; நூற்பு ஆலைகளே மிகுதி.

மேற்குறித்த நூற்பு ஆலைகளிலும், நெசவாலைகளிலும் ஈடுபட்டு இருப்போர் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்குமேல் இருக்காது. இத்துறையில் ஈடுபட்டிருப்போர் எண்ணிக்கை, இதைவிடக் கூடுதலாக இருந்தாலும் குறைவானதாக இருந்தாலும், இவர்களிடம்தான் குறைந்தபட்ச வாங்கும் சக்தியாவது இருந்துவருகிறது.

இவர்கள்கூட, வாழ்க்கையின் தேவைகளை முழுஅளவில் நிறைவேற்றிக்கொள்ள முனையும் பட்சத்தில், இவர்களும, மற்றவர்களைப்போல் இல்லாமையில் இடர்பட வேண்டியதுதான். இவர்களிலும் குறைந்த வருமானத்தில் கிடந்துழலுகிறவர்களுடன், இவர்கள் வருமானத்தை ஒப்பவைத்துப் பார்க்கும்போதுதான், மற்றவர்களைவிட இவர்களிடத்தில் குறைந்த அளவாவது வாங்கும் சக்தி இருக்கவேண்டும் எனத் தீர்மானிக்கமுடியும். தனித்தமுறையில் இவர்கள் வருமானத்தை மட்டும் கொண்டு மதிப்பிடுவதானல், வாங்கும் சக்தி அறவே இல்லாதவர்களுடன்தான் இவர்களையும் சேர்க்கவேண்டும்.

இத்தொழில்கள் நீங்கலாக சிறு சிறு இயந்திரங்களின் உதவி கொண்டும், அவைகளின் உதவி இல்லாமலும் நடைபெறும் சிறுதொழில்களும் சில உண்டு. அவைகளில், தங்கள் உடலுழைப்பை முதலாகக் கொண்டு தமிழ் மக்களில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களிடை வாங்கும் சக்தியைக் காண்பதும் அருபொருளாகும்.

அடுத்த கட்டத்தில் கருதத்தக்கவர்கள், மூளை உழைப்பை முதலாகக் கொண்டு, மத்திய—மாநில அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டு வருகிறவர்களாவர். தனியார் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்துவரும் மூளை உழைப்பினரையும் இவர்களுடன் சேர்த்துக் கணக்கிட வேண்டும்.

இம் மூளை உழைப்பினரை மூன்று வகையாகப் பிரிக்க வேண்டும். அம்மூன்று பிரிவினரில் முதல் பிரிவினரிடம்தான் கணிசமான வாங்கும் சக்தியை எதிர்பார்க்கமுடியும். சில உடலுழைப்பினரிடம் இருக்கக் கூடிய வாங்கும சக்தியைக்கூட, மற்ற இரண்டு பிரிவினர்களிடம் காணமுடியாது

எனவே, தமிழ்நாட்டில் வாங்கும் சக்தி, மிகுதியாகப் பெற்றிருப்பவர்கள், பெரும் நிலம் படைத்தவர்கள், ஆலை முதலாளிகள், தொழில்துறை பிரபுக்கள், பெரும் லேவாதேவிக் காரர்கள், பெரும் பெரும் வியாபாரிகள், அதிக ஊதியம் பெற்றுவரும் அரசாங்க — தனியார் துறை ஊழியர்கள் முதலியவர்களேயாவர்.

மற்ற இலட்சக்கணக்கான மக்களிடம் வாங்கும் சக்தி அறவே கிடையாது.

வாங்கும் சக்தி அணுவளவும் பெற்றில்லாத மக்களை இலட்சக் கணக்கில் வைத்துக்கொண்டு, தமிழகத்தின் நவீன தொழில் துறைக்கு அடிகோலுவது என்பது எப்படிச் சாத்தியமாகும்? நிபுணர்களதான் பதில் கூற வேண்டும்.

'விஞ்ஞானக் கருத்துக்களை அறிந்து கொள்ள ஆங்கிலம் இன்றியமையாததாகும்'

ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கருத்து

கண்டி (இலங்கை) டிச. 18—

"விஞ்ஞானக் கருத்துக்களை வெளியிடுவதற்கும், புரிந்துகொள்வதற்கும் தகுதியான—சக்திவாய்ந்த கருவி ஆங்கிலம்தான்" என்று, ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. எஸ். கிருஷ்ண இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கலைக் கழகக் குழு ஒன்றின் 33-வது ஆண்டு விழாவில் பேசுகையில் அவர், 'தொடர்ந்து ஆங்கிலம் பல்கலைக் கழகங்களில் நீடிக்கப்பட வேண்டும்' என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

"நமது பிரதேச மொழிகள், மேலைநாட்டு மொழிகளைப் போல, விஞ்ஞானக் கருத்துக்களை வெளியிடுவதற்குப் போதுமான வளர்ச்சியைப் பெறவில்லை; ஏனெனில், நமது கலாச்சார நடவடிக்கைகளும் வாழ்க்கை முறையும் வேறுபட்டனவாயுள்ளன; எனவே, நாம் ஒவ்வொரு மொழியின் தகுதி பற்றியும், விருப்பு வெறுப்புகளின்றி பரிசீலித்தாக வேண்டும். சரித்திரம், தத்துவம், நுண்கலைகள் இவற்றைப் போதிக்கத் தாய்மொழியே சிறந்த சாதனமாகும், என்றாலும், எல்லோரும் ஒப்பக் கூடிய சொற்களை நாம் உருவாக்க வேண்டிய வேலை இன்னும் பாக்கியிருக்கிறது.

"எல்லா விஞ்ஞானங்களையும் அறிய ஆங்கிலமே சிறந்த சாதனமாகும்; இந்த நிலையை இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாம் மாற்றமுடியாது என்பதால், நமது மாணவர்களுக்கு விஞ்ஞானக் கருத்துக்களை அறிந்துகொள்ள ஒரு நல்ல மொழியை நாம் தருவதுதான் விவேகமானதாகும்"

பண்டாவுக்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவு

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

கொழும்பு, டிச. 19—

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை என்று டிராட்ஸ்கிய நவலங்கா சமசமாஜக் கட்சி கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது.

பண்டா அரசாங்கத்திற்குக் கம்யூனிஸ்டு கட்சி ஆதரவளித்துள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 23 பேர்களும் எதிராக 54 பேர்களும் (கம்யூனிஸ்டுகள் உள்பட) வாக்களித்துள்ளனர்.

தொழிற்கல்வி

ஆசிரியர்களுக்குப் பயிற்சி

சென்னை, டிச. 18—

தொழிற்கல்வி ஆசிரியர்களுக்குக் கிண்டி பொறியியல் கலலூரியில் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று 1958 ஜூலை முதல் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் விமானத்தின் புதிய சாதனை!

மாஸ்கோ, டிச. 19—

ரஷ்யா புதிதாகக் கண்டுபிடித்துள்ள போர் விமானம் மணிக்கு 1,242 மைல் வீதம் பறப்பதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

அமெரிக்கப் போர் விமானம் மணிக்கு 1,202 மைல் வேகத்தில்தான் பறக்கக்கூடியதாம்!

இந்தியாவுக்குப் 'போர்டு நிறுவன' உதவி

புதுடில்லி, டிச. 19—

"அமெரிக்காவிலுள்ள 'போர்டு நிறுவனம்' 1957-ம் ஆண்டிற்கு மானியமாக மொத்தம் 55 இலட்சம் டாலர் (ரூ. 275 இலட்சம்) அளித்துள்ளது" என்று துணை நிதி அமைச்சர் பகத் மக்கள் சபையில் கேள்விநேரத்தின் போது தெரிவித்துள்ளார்.

மண்பாண்டத் தொழில் ஆராய்ச்சி நிலையம்

சென்னைக்கு மாற்றப்படுகிறது

சென்னை, டிச. 19—

மண்பாண்டத் தொழில் ஆராச்சி நிலையத்தை கூடூரிலிருந்து மாற்றி அதை சென்னை கைத்தொழில் பள்ளிக் கூடத்தில் அமைப்பதற்காக சென்னை அரசாங்கம் ரூ. 29 000 ஒதுக்கியுள்ளது என்று தெரியவருகிறது.

இராமநாதபுரத்தில் அமைதி காண வழி என்ன?

வகுப்புவாத நோய் ஆழமாக வேர்விட்டிருக்கிறது

தீவிரமான சிந்தனையும் உடனடியான நடவடிக்கையும் வேண்டும்

தாழ்த்தப்பட்டோர் நல அதிகாரியின் அறிக்கை

புதுடில்லி, டிச. 18—

தாழ்த்தப்பட்டோர் நல அதிகாரி, குடியரசுத் தலைவரின் யோசனையின்பேரில், இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார்.

அதன் பிறகு அவர் தந்த அறிக்கையை மக்கள் சபைக்குத் தரவேண்டும் என்றும், அதன் மீது விவாதம் நடத்த வேண்டும் என்றும் பல உறுப்பினர்கள் கோரினர்; 'அது இரகசியமானது' என்று கூறி, சர்க்கார் அதனை வெளியிட மறுத்தது.

ஒத்திவைத்திருந்த தனது தீர்ப்பினை சபைத் தலைவர் இன்று வெளியிடுகையில், கலகம், கொள்ளை, கொலை முதலிய சம்பவங்களைப் பற்றி விவரிக்கும் பகுதிகளைத் தவிர, அந்த அறிக்கையின் இதர பகுதிகளை மக்கள் சபைக்குத் தரவேண்டும் என்று கூறினார்.

அதன் பேரில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையின் பகுதியில் காணப்படுவதாவது:—

"அதிகாரப் பற்றற்ற—அரசியல் தொடர்போ வகுப்புவாதமோ அற்ற இயக்கம் ஒன்றினிடம், இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பினை, குறைந்தது ஓராண்டிற்காவது ஒப்படைக்க வேண்டும்.

"ஆழமாக வேர்விட்டிருப்பதாய்த் தோன்றும் இந்த வகுப்புவாத நோய் பற்றி தீவிரமான சிந்தனை வேண்டும்—உடனடியான நடவடிக்கைகள் வேண்டும்; நாளும் பெரிதாகிவரும் பின்தள்ளப்பட்டோர் பட்டியல், நிலைத்துவிட்டதனைக்கும் போக்குடைய பின் தங்கிய நிலைக்குப் பரிகாரமாகிவிடாது.

"சமுதாயத்தில் சில பிரிவினருக்கு விசேடமாக சலுகை அளிப்பதற்கு மையமாகக் கொள்ள வேண்டியது எல்லாம், தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் தாழ்நிலையிலிருக்கும வெகு சிலரின் பொருளாதார நிலை, சமூகத் தடைகள இவைதான்"

அந்த அதிகாரி, தனது அறிக்கையில், சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும், அவர்கள் அடைந்த நஷ்டங்கள் பற்றியும், அவர்களுக்கு உடனடியாக உருவான உதவி அளிக்க வேண்டியது பற்றியும் விளக்கமான கருத்துக்களை அறிவித்திருக்கிறார்.

சில பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பு

ஒரே விகிதமாக்க மாநில சர்க்கார்கள் சம்மதம்

பல்வேறு பொருள்களுக்கும் விற்பனை வரியை ஒரே விகிதத்தில் விதிக்கவேண்டுமென மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறதாம்!

ஆனால் மாநிலங்கள், 16 பொருள்களுக்கு மட்டுமே, அவ்வாறு ஒரே விகிதத்தில் விற்பனை வரி விதிக்கச் சம்மதித்தன என்று நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அந்த 16 சாமான்கள் எவை என்று குறிப்பிடவில்லை.

உபரி எக்சைஸ் வரி விதிப்பு (விசேட முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள்) மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மசோதா, பின்னர் நிறைவேறியது.

சர்க்கரையும், இந்த மசோதாவின் கீழ் சேர்த்துக்கொள்ள வேண்டுமென கூறப்பட்ட யோசனையை மந்திரி நிராகரித்தார்.

ஆலைத் துணிகளுக்கு, உபரியாக எக்சைஸ் வரி விதிப்பது தொழிலைப் பாதிக்கும் என்ற குற்றச்சாட்டினையும் மந்திரி மறுத்தார்.

வட சென்னையில் கடல் அரிப்பு

பாதுகாப்பு சுவர் அமைக்க ரூ. 31 இலட்சம் அனுமதி

வட சென்னையில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு, ரூ. 31 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டம் அமுலுக்கு வருகிறது.

ஆண்டுதோறும் ரூ. 5 இலட்சம் செலவிடப்படுமாம்; வேலைகளை மராமத்து இலாகா கவனித்து வருமாம்.

காசிமேட்டிலிருந்து வேலை ஆரம்பமாகிறது. கட்டப்படும் சுவற்றின் நீளம் 3,500 அடி என்று கூறப்பட்டுள்ளது.

பாடப்புத்தகங்கள்: சர்க்கார் வெளியிடும் யோசனைக்கு எதிர்ப்பு

★

பாடநூல் ஆசிரியர்கள் மாநாடு கோரிக்கை

சென்னை, டிச. 17—

"பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிடுவதெனச் செய்திருக்கும் முடிவு பொதுவாகக் கல்வியின் தரத்தையும், தமிழ் மொழியின் வளர்ச்சியையும் குறைக்கக் காரணமாக இருப்பதோடு, பலரின் வாழ்க்கைப் பிரச்சினையையும் பாதிப்பதாக உள்ளது; எனவே, அந்த முடிவைக் கைவிடவேண்டும்"

என்று, நேற்று சென்னை மெமோரியல் மண்டபத்தில் கூடிய பாடநூல் ஆசிரியர் மாநாடு ஓர் தீர்மானம் நிறைவேற்றியது.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. பி. டி. இராசன் அவர்கள் கல்வி பற்றிய விஷயங்களில் நாட்டின் அறிவாளிகள், கல்வி நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்டு செய்யவேண்டும் என்றும், எந்த மாற்றத்தையும் அவசரப்பட்டு செய்துவிடக்கூடாது என்றும் எடுத்துரைத்தார்.

மாநாட்டில், பல பாடநூல் ஆசிரியர்கள், மற்றும் எழுத்தாளர்கள் பங்கு கொண்டனர்.

★

திருச்சி மாவட்ட பாடநூல் ஆசிரியர் கழகக் கோரிக்கை

16—12—57-ல், முதலமைச்சர் காமராசர் அவர்களை, திருச்சி மாவட்ட பாடநூல் ஆசிரியர் கழகச் சார்பில் திருவாளர்கள் கோ. இரத்தினம்(பிள்ளை), ப. அரங்கசாமி, ஏ. எஸ். குப்புசாமி (ஐயங்கார்), கே. நாகராசராவ் ஆகிய நால்வரடங்கிய தூதுக்குழு ஒன்று பேட்டி கண்டு, ஓர் விண்ணப்பத்தைக் கொடுத்தது.

விண்ணப்பத்தை முதலமைச்சர் ஏற்று, ஆழ்ந்து நோக்கி விளக்கங்கள் கேட்டார்; முடிவில், 'இது பற்றிய பிரச்சினைகள் வரும்; வரட்டும் பார்க்கிறேன்' என்று கூறினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து வேண்டுகோள் ஏற்கப்பெற்று ஆவன செய்யப்படுமென்று நம்பப்படுகிறது.

★

சென்னைத் தமிழாசிரியர் கழக வேண்டுகோள்

சென்னைத் தமிழாசிரியர் கழகச் சார்பில், திருவாளர்கள் மா. இராசமாணிக்கம், த. சே. உமாபதி, புலவர் ந. சண்முகம், புலவர் அம்பை இரா. சங்கரன் ஆகிய நால்வரடங்கிய தூதுக்குழு ஒன்று 4—12—57ல், கல்வி அமைச்சர் அவர்களையும், 6—12—57-ல் முதலமைச்சர் அவர்களையும் சென்று பார்த்து, அரசாங்கம் புத்தகவெளியீட்டை மேற்கொள்வதால் பொதுவாகப் பலருக்கும்—சிறப்பாகத் தமிழாசிரியர்க்கும் ஏற்படவிருக்கும் துன்பங்களை எடுத்துரைத்ததோடு, தங்கள் வேண்டுகோள் பத்திரத்தையும் கொடுத்தார்கள்.

இரு அமைச்சர்களும் தூதுக்குழுவினரை வரவேற்று ஆவன புரிவதாகக் கூறினார்கள்.

★

பாடநூல் வெளியீட்டக ஊழியர்கள் நிலை

சென்னை, டிச. 17—

பாடநூல்களை அரசாங்கமே வெளியிடுவது எனச் செய்துள்ள முடிவின் விளைவாக சென்னை மாநிலத்தில் உள்ள 600 புத்தக வெளியீட்டகங்களில் பணியாற்றும் பல்வேறு ஊழியர்கள் வேலை இழக்கும் நிலையில் உள்ளனர்.

இந்த நிலையை உணர்ந்து ஊழியர்களுக்கு மாற்றுவேலை, வாழ்க்கை வசதி போன்ற பாதுகாப்பை அரசாங்கம் தரவேண்டும் என்று திரு. வெங்கடேசன் தலைமையில் தூது சென்று கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களைக் கண்டு முறையிட்டுள்ளனர்.

நிலைமையை ஆராய்ந்து ஆவன செய்வதாக அமைச்சர் பதிலளித்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

ஆயுர்வேத பட்டதாரிகளுக்குப் புதிய சலுகை

கேரள சர்க்கார் திட்டம்

திருவனந்தபுரம், டிச. 19—

திரு-கொச்சி ஆயுர்வேதக் கல்லூரிகளில் டி. ஏ. எம். பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு இரண மருத்துவம், பிரசவ மருத்துவம் முதலியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது; ஆனால் அவர்கள், பட்டம் பெற்ற பின்னரும்கூட இரண வைத்தியம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை; இப்போது அந்தத் தடையை நீக்கி அவர்களும் இரண வைத்தியம் செய்யலாம் என்ற புதிய திருத்தம் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டு கட்சியினர் இழிசெயல்

15—12—57 அன்று, சென்னப்பநாய்க்கன் பாளையம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் கலந்துகொண்டு, சொற்பொழிவாற்றிவிட்டு இரவு 10 மணியளவில், நெல்லிக்குப்பத்திற்குச் செல்லும்போது, அவரை வழியனுப்பி விட்டு, நெல்லிக்குப்பத்திற்குக் கால்நடையாகச் சென்றுகொண்டிருந்த தோழர்கள் கே. ஆர். சபாபதி, சி. பர்லவேலாயுதம், கே. சாபு, தம்பித்துரை, மணி, வி. சிவப்பிரகாசம், டி. தண்டபாணி, என். எஸ். தண்டபாணி ஆகியோரை கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் (கண்ணாயிரம், தட்டார சுப்பிரமணியன், கச்சிராய படையாச்சி மகன்—பெயர் தெரியவில்லை—என்று நம்பப்படுகிறது) சாலையில் கொட்டிவைத்திருக்கும் கற்களால் இருட்டிலிருந்து தாக்கினார்கள். மூன்று பேர்களுக்குக் காயங்களும் மற்றவர்களுக்கு உள்காயமும் ஏற்பட்டிருக்கின்றன. அன்றிரவு 12 மணிக்கு, நெல்லிக்குப்பம் போலீசில் புகார் செய்யப்பட்டதுடன், காயம்பட்ட தோழர்கள் அரசினர் மருத்துவ மனை டாக்டரிடம் சான்றிதழ் பெற்று அதைத் தாக்கல் செய்துள்ளனர்.

நடுவீரப்பட்டு என்ற சிற்றூருக்கும் கெடிலம் ஆற்றுக்குமிடையில் உள்ள பயங்கரப் பாதையில்—பார்த்தவர் எதிர்முகம் காணவியலாக் காரிருளில் இச்சம்பவம் நடந்தது. (ந. கி.)

உணவுத் தானியம்

பெருக்கத்திற்கு ஒரு யோசனை

புதுடில்லி, டிச. 19—

உணவுத் தானிய மகசூலை அதிகரிப்பதற்காக ஒட்டுத்தானியம் பயிரிடும் முறையைப் பின்பற்றலாம் என்றும், அதற்கான ஆராய்ச்சி நடத்தலாம் என்றும் பேராசிரியர் ஆல்டேன் வானொலியில் தெரிவித்துள்ளார்.

சேலம் - ஆத்தூரில் பொதுச்செயலாளர்

25—11—57 மாலை 6 மணியிலிருந்தே மக்கள் திரளாகக் கூடியிருந்து பொதுச்செயலாளர் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அன்று இரவு 8 மணிக்கு ஆரம்பிக்க இருந்த கூட்டம் பொதுச்செயலாளர் வர தாமதம் ஆனபடியால் இயக்கத் தோழர்கள் பலர் இயக்கப் பண்களை முழக்கி நேரம் போனதே தெரியாத வண்ணம் மக்களை மகிழ்ச்சியிலாழ்த்தினர்.

சரியாக இரவு 9 மணிக்குப் பொதுச்செயலாளர் மேடைக்கு வந்தடைந்ததும் 'பொதுச்செயலாளர் வாழ்க; திராவிட நாடு திராவிடருக்கே' என்று விண்ணதிரும் முழக்கங்களுடன் பொதுச்செயலாளர் அவர்களை வரவேற்றனர்.

தோழர்கள் ஆர். கன்னையன் முன்மொழிய, இராசு வழிமொழிய, ஆத்தூர் நகர தி. மு. கழகச் செயலாளர் டி. கே. மாதவன் தலைமை தாங்கினர்.

தோழர்கள் இருசப்பன் எம்.எல்.ஏ., ஆனைமுத்து, எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., ஆகியோர் பேசியபின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பெருத்த ஆரவாரத்திற்கிடையே பேச எழுந்தார்.

ஆத்தூர் நகர தி. மு. கழகம், கெங்கவல்லி தி. மு. கழகம் ஆகியவை சார்பில் பொதுச்செயலாளருக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன; ஆத்தூர் நகர சுத்தித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், ஆத்தூர் அண்ணா படிப்பகம், நரசிங்கபுரம் தி. மு. கழகம், கிருஷ்ணாபுரம், தாண்டவனூர், ஏத்தாப்பூர், ஆனையாம்பட்டி, கல்லாநத்தம், கூடமலை மற்றும் பல ஊர்களின் தி. மு. க. கிளைகளின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் பேசுகையில் தேர்தலுக்குப்பின், தி. மு. கழகத்தின் வேலைகள், தி. மு. கழக வளர்ச்சி சட்டசபையில், மற்றும் பேற்றும் வகையில் தி. மு. கழகம் செய்துவரும் சேவை, இந்தித் திணிப்பு ஆகியவற்றை விளக்கினார்.

மழை வந்தும் மக்கள் ஆர்வத்துடன் அமைதியாகப் பேச்சைக் கேட்டனர்.

கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ. 30-ம் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்களால் பொதுச்செயலாளரிடம், அவருடைய தேர்தல் வழக்கு நிதிக்காக அளிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

நதியின் ஓட்டம் மாறியதன் விளைவு!

புதுடில்லி, டிச. 19—

"ரவி நதியின் ஓட்டம் மாறியதன் காரணமாக இந்திய எல்லையிலிருந்த 20 கிராமங்கள் பாகிஸ்தான் வசம் சேர்ந்துவிட்டதாக பஞ்சாப் மாநில அரசாங்கம் அறிக்கை அனுப்பியிருக்கிறது" என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்வாய் நீர்த் தகராறு

தீர்வு காண உலக பாங்கி முயற்சி

தோற்றுவிட்டதாகத் தகவல்

கராச்சி, டிச. 18—

கால்வாய் நீரைப் பங்கிட்டுக் கொள்வது பற்றிய இந்தியா—பாகிஸ்தான் தகராறுக்கு ஒரு முடிவு காண உலக பாங்கி மேற்கொண்ட முயற்சி தோற்றுவிட்டதாக பாகிஸ்தான் அதிகார வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் நடத்த கராச்சி வந்திருந்த உலக பாங்கி அதிகாரிகள், வாஷிங்டன் திரும்பிவிட்டதாகவும் அவை கூறியிருக்கின்றன.

பாகிஸ்தான் கட்டும் இணைப்புக் கால்வாய்களுக்குப் பணம் தர இந்தியா மறுத்துவிட்டதினாலேயே பேச்சுவார்த்தைகள் முறிந்ததாக, அந்தப் பாகிஸ்தான் வட்டாரங்கள் கருதுகின்றன.

உணவு இறக்குமதி

மிகுவிக்க ஏற்பாடு

10 இலட்சம் டன் அதிகமாக இறக்குமதியாகுமெனத் தகவல்

புதுடில்லி, டிச. 18—

அடுத்த ஆண்டில், ஏற்கனவே திட்டமிட்டிருந்த 15 இலட்சத்திற்கு அதிகமாக—மேலும் 10 இலட்சம் டன் உணவுப் பொருள் இறக்குமதி செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதாக உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் கூறியிருக்கிறார்.

மாநிலங்கள் சபையில் உணவு நிலை பற்றி ஒரு ஆறு மணி நேர விவாதம் நடைபெற்றது. சர்க்காரின் உணவுக்கொள்கையைப் பலரும் கண்டித்தனர்.

உணவு உற்பத்தியை எல்லா வழிகளாலும் பெருக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென காங்கிரஸ்காரர் ஒருவர் கொண்டுவந்த திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கம்பெனிகள் சட்டம்

மாறுதல்கள் அவசியம் இல்லையென முடிவு

ஒருசில கம்பெனிகள் தனிப்பட்ட அரசியல் கட்சிகளுக்குப் பல்வேறு உள்நோக்குடன் பெருந்தொகையை நன்கொடையளிப்பது தெரிந்ததே.

இது சரியா தவறா என்று முடிவு செய்யவும், மேலும் பல மாற்றங்களைச் சட்டத்தில் ஏற்படுத்தவும் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையைத் தயாரித்துள்ளது.

சட்டத்தின் அமைப்பில் பெரிய மாறுதல்கள் அவசியம் இல்லை என்று அந்தக் குழு முடிவு செய்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு உதவியளிப்பதுபற்றி மேலும் தகவல்கள் வேண்டும் என்று குழு அறிவித்துள்ளது.

இந்தக் குழுவிற்கு சென்னை நீதிமன்ற நீதிபதி திரு. விசுவநாத சாஸ்திரி தலைமை வகித்துள்ளார்.

முடிவு எடுக்கவே மூன்று மாதமாகுமாம்!

புதுடில்லி, டிச. 18—

"நடைமுறை நிதி ஆண்டு முடிவதற்குள், சேது சமுத்திரம் திட்டத்தை ஏற்பதா வேண்டாமா என்பது பற்றி டெல்லி சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள்"

என்று, கப்பல் போக்குவரத்து மந்திரி ராஜ்பகதூர், மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

இந்தோனேஷியக் கடல்கள் பற்றித் தகராறு?

லண்டன், டிச. 18—

இந்தோனேஷியக் குடியரசுக்கு உட்பட்ட 3,000 தீவுகளுக்கிடையே உள்ள கடல் பகுதி இந்தோனேஷிய எல்லைக்கு உட்பட்டது என்று இந்தோனேஷிய அரசாங்கம் அறிவித்ததை பிரிட்டன் மறுத்துள்ளது. இத்தீவுகளுக்கிடையே உள்ள கடல் பகுதிகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது என்று பிரிட்டிஷ் அயல்நாட்டு செயலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர் கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பாராளுமன்ற ஜனநாயக முறை

'இந்தியாவில் படுதோல்வி அடைந்துவிட்டது'

அரசியல் துறவி ஜெயப்பிரகாசரின் ஆராய்ச்சியுரை

புதுடில்லி, டிச. 18—

பாராளுமன்ற சனநாயகம் இந்தியாவில் முழுத் தோல்வியடைந்துவிட்டதாக, அரசியலிலிருந்து விலகிவிட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணன் இங்கு கூறியிருக்கிறார்.

'இந்தியாவில் சனநாயகத்தின் அடிப்படைகள், என்ற தலைப்பில், கலாச்சார சுதந்தரக் காங்கிரசின் சார்பில் பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவைப் போன்றதொரு பின்தங்கிய நாட்டினை அளவுமீறிய வேகத்தில் தொழில்மயமாக்க நினைப்பது, இங்கு சனநாயகத்தின் அடிப்படைகள் மிகப் பலவீனமாக இருப்பதால், ஒரு சர்வாதிகார ஆட்சிக்கே வழிகாட்டும்.

'இன்று இந்தியாவில், பாராளுமன்ற சனநாயகம் படுதோல்வி அடைந்துவிட்டது.

"இன்றைய நிலையில் உள்ள மந்திரிசபை சனநாயக முறை, உச்சமான அதிகாரபீடத்திலிருப்பவர்—பண்டித நேரு அல்லது சர்ச்சில் போன்ற செல்வாக்கு வன்மையுடையவர்களானால் ஒரு தனி மனிதனின் ஆட்சியாகத்தான் அது உருப்பெறும்.

"குறிப்பாக இந்தியாவில், தற்போதைய சனநாயகத்தின் இதர பலவீனங்கள், தேர்தல் முறையிலிருக்கின்றன; இதில் பெரும்பாலான வாக்காளர்கள், கல்வி அறிவு பெறாதவர்கள்—தெளிவு பெறாதவர்கள்.

"மற்றுமொரு அதைரியப்படுத்தக்கூடிய அம்சம் என்னவெனில், அதிகாரத்தை விரும்புகிற மத்திய தரவர்க்கத் தலைமையின் வளர்ச்சியாகும்.

"நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப்படுகிறது; முதலாளித்துவம் ஒழிக்கப்படுகிறது; ஆனால், மத்தியதர வர்க்கம் ஒரு புதிய சரித்திரப் புரட்சியை நடத்துவதை நாம் காண்கிறோம்.

"சுயேச்சையாக இயங்குகிற கிராம 'யூனிட்டு'களை அமைப்பதன் மூலம்தான் சனநாயகப் பாரம்பரியங்களை உருவாக்க முடியும்; இதற்கு, சனநாயகம் பற்றிய நமது அடிப்படையான கருத்துக்களையே புனர் பரிசீலனை செய்தாக வேண்டியது அவசியமாகும்."

கழகக் கூட்டங்கள்

★

பழையநல்லூர்:
மாரியம்மன்கோயிலுக்கு அருகில்
23—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்:
இரத்தின-பாலகுருசாமி
பேசுவோர்:
அண்ணா
தில்லை-வில்லாளன்
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
எம். ஆனந்தன் எம்.எல்.ஏ.
தோழர் இரா. சக்கரவர்த்தி எம்.சி. கழகக் கொடியேற்றுவார்; இசைமுரசு நாகூர் அனீபா இசைவிருந்தளிப்பார்.

★

பெரியகொல்லப்பட்டி:
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
பாடசாலை அருகாமையில்
23—12—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: ப. வையாபுரி
பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். ஏ. அன்புக்கரசு
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

காளப்பநாய்க்கன்பட்டி:
வ. உ. சி. திடலில்
23—12—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: கே. பெரியசாமி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

★

நான்சச் (நீலகிரி):
தொழிலாளர் விடுதித் திடலில்
21—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஒளியழகன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
சஞ்சீவி

★

கூனூர்:
சவுகர் திடலில்
22—12—57 மாலை 3 மணிக்கு
தலைவர்: டைட்டஸ்
பேசுபவர்: என். வி. நடராசன்

★

இராசிபுரம்:
இராமதீர்த்தம் கிணறு
மைதானத்தில்
22—12—57 மாலை 5½மணிக்கு
தலைவர்:
கே. எஸ். இராமலிங்கம்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

சேலம்—அம்மாப்பேட்டை:
ராஜ கணபதி தெருவில்
22—12—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. எஸ். மணி
கே. ஏ. வேங்கடாசலம்
கே. ஆர். மாசிலாமணி

★

கீழப்பாவூர்:
பாண்டியனுர் திடலில்
22—12—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: பி. ஆர். வைகுண்டம்
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
ஏ. இராமநாதன்
ஆ. திராவிடமணி

★

பொள்ளாச்சி:
மார்க்கெட் ரோடிலுள்ள
திருவள்ளுவர் திடலில்
22—12—57மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
பி. என். இராமானுசம்
இராமநாதன்

★

கோவை:
கோட்டை பி. கே. செட்டி வீதி
22-12-57 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
சிதம்பரனுர், செழியன்
மு. இராமநாதன், தென்னரசு
திராவிடமணி

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

செயற்குழுக் கூட்ட முடிவுகள்

15-12-57 மாலை நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

திராவிடர் திருநாளை நல்லமுறையில் நடத்துவதற்கு ஒவ்வொரு கிளைக் கழகமும் ரூ 5 வீதம், ஜனவரி 5-ந் தேதிக்குள் அவசியம் தந்துதவ வேண்டும்.

மாவட்டக் கழகத்தின் சார்பில் நடைபெறும் திராவிடர் திருநாளுக்காக ஆகும் செலவுகளுக்கு கிளைகளின் மூலம் வசூலாகும் தொகைபோக மிகுதியை பெரம்பூர் தொகுதியைச் சார்ந்த கிளைகள் ஏற்றுக்கொள்வதால், 'திராவிடர் திருநாளை' மேற்குச் சென்னையில் நடத்துவதென்றும் அதற்கு, தோழர்கள் அ. பொ அரசு, தி சு நல்லதம்பி, சு. பாலன், க. சிதம்பரம், பொ. பா ஏகாம்பரம் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினை நியமிக்கிறது.

மாவட்ட வளர்ச்சி (மன்றம், கிளைக்கழக, மாவட்ட தொடர்பு) குறித்து ஆலோசித்து முடிவு செய்ய கிளைகளின் செயலாளர்கள், மாவட்ட உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தை பொதுச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் நடத்துவதென்று முடிவு செய்கிறது.

மாவட்ட நிதி நிலையை வளர்க்க தோழர்கள் கே. எம். கண்ணபிரான், வி ராமசாமி, சி ஆர். பாலசுந்தரம், தி. சு நல்லதம்பி, கோ. இளவரசு, அ பொ. அரசு, நீல-நாராயணன், பி. எம் மதியழகன், சா வில்லவன் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினை நியமிக்கிறது.

வடாற்காடு மாவட்ட

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

★

22-12-57 மாலை 2-மணிக்கு, திருவண்ணுமலை இராமநாதன் செட்டியார் ஹாலில் (காந்தி சிலைக்கு அருகில்) மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், கீழ்க்கண்ட பொருள்கள் ஆய்வுக்கு வரும்; உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு, தவருது வருகை தர வேண்டுகிறேன்.

பொருள்:—

1. மாநாட்டு வரவு-செலவு.
2. மத்திய கழகத்திற்கு நிதி அளித்தல்.
3. இதர விஷயங்கள்:

என, மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் அறிவிக்கிருர்.

சென்னை—47வது வட்ட

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

21—12—57 இரவு 8 மணிக்கு சைதாப்பேட்டை கடைத் தெரு, எண் 95 இல்லத்தில் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை—16-வது வட்ட

தி. மு. க. உறுப்பினர்களுக்கு:

22—12—57 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் (எண் 22, திருவேலியன் பேகின் தெரு). சென்னை மாவட்ட துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் தலைமையில் கிளைக் கழகச் செயலாளர் தேர்வு நடைபெறும்.

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

டிச.
22: தூத்துக்குடி
23: புதியமுத்தூர்
24: சாயர்புரம்
25: பரமன்குறிச்சி
(திருநெல்வேலி மாவட்டம்)
ஜன.
4: முட்டத்தூர்
(தென்னுற்காடு மாவட்டம்)

திண்டிவனம்:
காவேரிப்பாக்கம் பெரியார்திடல்
22—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். பூபால்
பேசுபவர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

இலாசுப்பேட்டை:
(புதவை வட்டம்)
ஐயனுர் கோயில் திடலில்
22—12—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: சு. பெருமாள்
பேசுவோர்:
ஏ. கே. வில்வம்
அருண்மொழி
கே. ஆர். சபாபதி
தி. ப. குருசாமி

காஞ்சிக்குப்

பொதுச்செயலாளர் வருகை

4-1-58-ல், காஞ்சியிலும் காஞ்சியை அடுத்த அய்யம்பேட்டையிலும் நடைபெறவிருக்கின்ற கழகப் பொதுக்கூட்டங்களில் தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொள்வார்கள்.

சென்னை—4-வது வட்ட

அண்ணு படிப்பக

ஆண்டு விழா

மு. கருணுநிதி கலந்துகொள்வார்

22—12—57 மாலை 5-30 மணிக்கு சென்னை—வண்ணை, சோலையப்பன் தெருவில், அண்ணு படிப்பக முதலாண்டு விழா, தோழர் கே. எம் கண்ணபிரான் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் மு. கருணுநிதி எம்.எல் ஏ., எஸ். எஸ். தென்னரசு, சேதுராமன், எஸ். பி. பிச்சையா, ஏ. வரதன் ஆகியோர் பேசுவர்; டேப்-இராதாமாணிக்கம் இசை வழங்குவார்; கூட்டத்தில், பன்மொழிப் புலவர் மணிவிழாவுக்கு நிதி வழங்கப்படும்.

சென்னை—4-வது வட்ட

மன்றங்கள்—படிப்பகங்கள் செயலாளர்கட்கு:

20—12—57 இரவு 8 மணிக்கு மேற்படி வட்ட தி. மு. க. பணிமனையில் (எண் 20/22, காளிங்கராய முதலி தெரு, வண்ணை). கழகச் சார்புடைய மன்றங்கள்—படிப்பகங்கள் ஆகியவற்றின் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

இசை நிகழ்ச்சி

21—12—57 இரவு 10 மணிக்கு சென்னை—பல்லாவரம் கே. வி. கே. சாமி மன்றத்தின் (தி.மு.க. உட்கிளை) சார்பில், கடைவீதி பிள்ளையார் கோவில் சந்திப்பில், நாகூர்-அனீபா, தம் குழுவினருடன் இன்னிசை வழங்குவார்; தோழர் ஆர். எஸ். பாண்டியன் தலைமைவகிப்பார்.

சென்னை-சூளை ஊ.பு.அ.சௌந்திர பாண்டியனுர் நினைவுப் படிப்பகம்

22—12—57 காலை 9 மணியளவில் மேற்படி படிப்பக நிதிக் குழுவினர், பொங்கல் விழாவிற்காக வட்டத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் அரிசி அல்லது காசு வசூலிப்பர்.

குறள் வகுப்பு

21—12—57 முதல் சென்னை 4-வது வட்ட என்.எஸ்.கே. தமிழ் வளர்ச்சி மன்றத்தில் (எண் 10, சைனியப்பன் தோட்டம், 3-வது சந்து, வண்ணை) சனிதோறும் இரவு 8 மணிக்கு குறள் வகுப்பு நடைபெறும்.

மேட்டுப்பாளையத்தில் செயற்கை வைரத் தொழிற்சாலை!

கோவை, டிச. 20—

ஆசியாவிலேயே முதலாவதான செயற்கை வைர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று, மேட்டுப்பாளையத்தில் இன்று துவங்குகிறது.

ஆண்டுதோறும் ரூ. 25 இலட்சம் பெறுமான செயற்கை வைரக்கற்கள் உற்பத்தி செய்யும் இந்தத் தொழிற்சாலை, இந்திய-சுவிஸ் கூட்டுறவில் துவக்கப்படுகிறது.

உலகில் பெரியதான செயற்கை வைரத் தொழிற்சாலைகள் எட்டுதான் உள்ளன என்றும், இவை சுவிட்சர்லாந்தில் 5; பிரான்சில் 1; அமெரிக்காவில் 1; ஜெர்மனியில் 1-என அமைந்திருப்பதாகவும், இவை அத்தனையும் ஆண்டுதோறும் 400 டன் வைரம் உற்பத்தி செய்கின்றன என்றும் கூறப்படுகிறது.

மலைமீது மிருகக் காட்சி சாலை!

சென்னை, டிச. 19—

திருமலை—திருப்பதி தேவஸ்தானம் போர்டார், மலையின்மேல் ஒரு மிருகக் காட்சிசாலை திறுவ ஏற்பாடு செய்கின்றனராம்!

இதுபோல், மலைமேல் மிருகக் காட்சிசாலை அமைவது தென்னிந்தியாவில் இதுவே முதலாவதாகும்.

ஆந்திராவைப் பொறுத்து, இது இரண்டாவது மிருகக் காட்சி சாலையாகும்; ஏற்கனவே ஐதராபாத்தில் ஒன்று இருக்கிறது.

கோலாரில் தங்கப்படிவங்கள்

சென்னை, டிச. 19—

கோலாரில் நடத்தப்பட்டுவரும் பூதத்துவ ஆராய்ச்சி, மேலும் தங்கப்படிவங்கள் அங்கு கிடைக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தருவதாகக் கூறப்படுகிறது.

கோலார் தங்கவயல் பகுதியிலும், ஆந்திரத்திலும் மேலும் ஆராய்ச்சி நடைபெற்றுவருகிறதாம்.

கேரளத்தில் வயநாட்டுப் பகுதியிலும் தங்கக் கனிப் பொருள் இருப்பதாகக் கூறப்படுவதை ஆராயவும் ஏற்பாடு செய்யப்படுமாம்.

கேரள அமைச்சர்கள் பெறும் ஊதியம்?

கேரள அமைச்சரவையில் 8 பேர் மாதம் ரூ. 350 ஊதியம் பெறுகின்றனர் என்றும், மூன்று பேர் ரூ. 500 பெறுகின்றனர் என்றும் செய்தி ஒன்றில் காணப்படுகிறது.

அரிசி, நெல்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது என்றும் கூறப்படுகிறது.

வரும் சம்பா அறுவடையின் போது, தஞ்சையில் சென்னை சர்க்கார் ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யும் என்றும், இதில் மத்திய சர்க்காரிடம் மாதம் 4,000 டன் வீதம் அக்டோபர் முதல் 5 மாதங்களுக்கு வாங்கும் கடனை—20,000 டன் அரிசியைத் திருப்பித் தந்துவிடும் என்றும் எஞ்சும் 80,000 டன் அரிசியை சேமித்து வைத்திருக்கும் என்றும் கூறப்படுகிறது.

நீத்தார் வழிபாடு

தோழர் ஆ. இராசன் அவர்களது அன்னை பார்வதி அம்மையார் இயற்கையெய்தியதையொட்டி 22—12—57 காலை 10 மணிக்கு சென்னை—எடபாளையம், அனுமந்தராயன் கோயில் தெரு, எண் 32 இல்லத்தில், தோழர் மணிவண்ணன் தலைமையில் நீத்தார் வழிபாடு நடைபெறும்; அதுபோது, தோழர்கள் அ. பொன்னம்பலனுர், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

'நினைத்தது நடந்தது'

21—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—அரண்மனைக்காரத் தெரு, செயின்ட்மேரிஸ் மண்டபத்தில், தென் பகுதி இரயில்வே தமிழ்க் கலைமன்றச் சார்பில், திரு. பகீரதன் தலைமையிலும், தோழர் கண்ணதாசன் முன்னிலையிலும் சென்னை—வண்ணை தியாகராயர்களின் கலைமன்றத்தார் நடிக்கும் 'நினைத்தது நடந்தது' என்ற நாடகம் நடைபெறும்.

மணவழகர் மன்றம்

21—12—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை மணவழகர் மன்றம்—நக்கீரர் பட்டி மன்றத்தில் (எண். 2, முருகேச முதலி தெரு), தோழர் ஏ. எஸ். வேணு தலைமையில், 'தமிழ்நாட்டுத் தலைவர்கள்' என்ற தலைப்பில், தோழர்கள் முடியரசன், பெ வெ. செங்குட்டுவன் பேசுவர்.

அறிவளர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம்

22—12—57 மாலை 6-30 மணியளவில் மதுராந்தகம் தாலுகா ஆக்கினம்பேடு அறிவளர்ச்சிக் கழகச் சார்பில், ஆரம்பப்பள்ளி அருகில் திரு அருணுசலம் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சி. சேகர், இரா. குப்புசாமி, எஸ். டி. எல். பதி, ஜி. பாலகிருட்டிணன் ஆகியோர் கிராம வளர்ச்சி—சமூக சேவை பற்றிப் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

21—12—57 மாலை 6-30 மணியளவில், சென்னை-சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பக மனையில் (1/26, ஆலந்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு), தோழர் க. பா. சாரதி தலைமையில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

21—12—57 இரவு 7 மணியளவில், சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில், தோழர் கு. அமிர்தலிங்கம் தலைமையில், 'பேச்சுத் தயாரித்தல்' எனும் தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

22—12—57 இரவு 7 மணியளவில், சென்னை-தியாகராயநகர், மதிவளர் மன்றத்தில், தோழர் ந. தனபால் தலைமையில், 'கடமை' என்ற தலைப்பில், தோழர்கள் டி. ஆதிநாராயணன், டி. கே. பொற்கொல்லன், மா. பூ. வீரபத்திரன் ஆகியோர் பேசுவர்.

* * *

22—12—57 காலை 8 மணிக்கு, சென்னை 11-வது வட்ட என். எஸ். கே. நினைவு மன்றத்தில் (எண் 64, சாலை விநாயகர் கோவில் தெரு), தோழர் வ. மறையரசு தலைமையில், 'பழைமையும் புதுமையும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

22—12—57 காலை 10 மணியளவில், சென்னை-ஆலந்தூர் தி. மு. கழக மாடியில், 'திராவிடம் ஏன் பிரியவேண்டும்?' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

22—12—57 மாலை 6 மணியளவில், காரைக்குடி நா. புதூர் இளங்கோ படிப்பக சொற்பயிற்சி மன்றத்தில், தோழர் தமிழண்ணல் தலைமையில், 'அறம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.